www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு : 12

தேர்வு எண் | | | | | | |

# முதல் திருப்புதல் தேர்வு, ஜனவரி – 2025

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

அ) ஒரு கிராமத்து நதி ஆ) ஒளிப்பறவை இ) சர்ப்பயாகம் ஈ) நிலவுப்பூ

2. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

3. கவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

4. 'விளியறி ஞமலி' இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யானை

5. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

6. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் – i) பரலி. சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ – ii) தி. சு. நடராசன்
இ) கிடை – iii) சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – iv) கி. ராஜநாராயணன்

அ) அ – iv, ஆ – iii, இ – ii, ஈ – i ஆ) அ – i, ஆ – iv, இ – ii, ஈ – iii
இ) அ – ii, ஆ – iv, இ – i, ஈ – iii ஈ) அ – ii, ஆ – iii, இ – iv, ஈ – i

7. வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) காட்சி மறைவு ஆ) காட்சி உதயம்
இ) காட்சி அழிப்பு ஈ) சேய்மைக் காட்சித்துணிப்பு

8. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்　　ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டு களைக் கண்டறிந்தனர்

இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது　　ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

10. 'வயங்குமொழி' - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) பண்புத்தொகை　ஆ) வினைத்தொகை　இ) உவமைத்தொகை　ஈ) உம்மைத்தொகை

11. 'திட்டம்' என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?

அ) அமுதசுரபி　ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம்　ஈ) பயனற்ற விளைவு

12. DEBIT CARD என்பதன் சரியான தமிழ்ச்சொல்

அ) கடன் அட்டை　ஆ) பற்று அட்டை　இ) திறன் அட்டை　ஈ) குடும்ப அட்டை

13. 'கோடை மழை' – இச்சிறுகதையின் ஆசிரியர்

அ) சாந்தா தத்　ஆ) பூமணி　இ) சுரதா　ஈ) உத்தமசோழன்

14. 'கவாஅன்' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) இன்னிசை அளபெடை　ஆ) சொல்லிசை அளபெடை

இ) செய்யுளிசை அளபெடை　ஈ) உரிச்சொல் தொடர்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x2=6

15. இடையீடு கவிதை – எவற்றைக் குறியீடாக் குறிப்பிடுகிறது?

16. தலைக்கோல் என்பது யாது?

17. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?

18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19. சங்க இலக்கியம் குறிப்பிடும் வழிபாட்டுப் பெயர்களை எழுதுக.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. மேலாண்மை விதி யாது?

### பிரிவு–3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

எலியும் பூனையும் போல

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிந்து கொள்ள வேண்டும்.

ஆ) ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25.தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது

ஆ) ஐப்பசி அடமழையில் ஊருணி நிறைந்தது.

26.பகுபத உறுப்பிலக்கணம் தருக.

உயர்ந்தோர் (அல்லது) தாங்கிய

27.புணர்ச்சி விதி தருக.

ஏழையென (அல்லது) பூம்பாவாய்

28.கலைச்சொற்களுக்குத் தமிழாக்கம் தருக.

அ) Jurisdiction ஆ) Animation

29."மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

30.கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

அ) குதிரை, வேகம், ஓடு, தாவு ஆ) குழந்தை, நட, தளிர்நடை, விழு

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. குளிர்கால நள்ளிரவில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. 'மூன்றான காலம் போல் ஒன்று' – எவை? ஏன்? விளக்குக.

33.இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் வேண்டுவன யாவை?

34.கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35.உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கும் சொல்வளம் குறித்து எழுதுக.

36.பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.

37.நம் சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் கூறி விளக்குக.

38.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39.பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40.இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக).

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

– *கவிமணி தேசிக விநாயகம்*

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. பாடாண் திணை (அல்லது) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) ஆ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

43. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

அ) அன்பே -------- (ஆர்வமாய் / தகளியாய்)

ஆ) வான்மழை --------- (தூறலில் / பொழிந்திடின்)

இ) கண்ணிரண்டும் -------- (இலாதார் / இல்லார்)

ஈ) வெய்யோன் --------- (காய்ந்திட / ஒளிர்ந்திட)

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) "காய்நெல்......" எனத் தொடங்கும் புறநானூறு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....... செயல்' – என முடியும் குறட்பாவை எழுதுக.

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com